

Makkal Osai
17/07/2009
Page: 4
Section: General News
Region: Malaysia Circulation: 28000
Type: Malaysia - Tamil Newspapers
Size: 261.00 sq.cms
Frequency: MTWTFS



# ஈப்போ - சிங்கப்பூர் விமானச் சேவையினை ஃபையர் பிளை தொடங்கியது

லெட்சுமி ராஜா

ஈப்போ, ஜுலை 17-

மலேசிய நாட்டிற்கு சுற்றுலா மேற்கொள்ளும் 12 லட்சம் வெளிநாட்டுச் சுற்றுப்பயணிகளில் சுமார் 20 விழுக்காட்டுப் பயணிகளை பேராக் மாநிலத்திற்கு சுற்றுலா மேற்கொள்வதன் வழி சிங்கப்பூரை போன்று பேராக் மாநிலமும் சுற்றுலாத் துறையில் சிறந்து விளங்க முடியும்.

ஈப்போவில் இருந்து சிங்கப்பூருக்கு தொடங்கப்பட்டுள்ள ஃபையர் பிளை விமானச் சேவையின் வழி இவ்விலக்கை அடைய முடியும் என்று மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ மா ஹான் சங் தெரிவித்தார்.

இம்மாதம் 12ஆம் நாள் தொடங்கப்பட்ட ஃபையர் பிளை விமானச் சேவை ஈப்போவில் இருந்து சிங்கப்பூருக்கு மாலை 5.00 மணிக்குப் பயணமான முதல் வெள்ளோட்டப் பயணத்தில் மாநில ஆட்சிக்குழு உறுப்பினர்களான டத்தோ மா ஹான் சங், முகமது சஹிர், மாநில மந்திரி புசாரின் ஆலோசகர் டத்தோ எஸ். வீரசிங்கத்துடன் பத்திரிகையாளர்களும் பயணம் செய்தனர்.

சிங்கப்பூரில் இருந்து ஈப்போ சுல்தான் அஸ்லான் ஷா விமான நிலையத்தில் முதன் முதலாக மாநில 5.00 மணிக்கு வந்திறங்கிய ஃபையர் பிளை விமானத்தில் பயணம் செய்த 57 பேர் டத்தோ மா ஹான் சங், முகமது சஹிர், டத்தோ எஸ். வீரசிங்கம் ஆகியோர் மாலை அணிவித்துப் பலவித பாரம்பரிய நடனங்களுடன் சிறப்பாக வரவேற்றனர்.

அதே விமானத்தில் ஈப்போ - சிங்கப்பூருக்குப் பயணம் செய்த 71 பேரை பேராக் மாநில மந்திரி புசார் டத்தோஸ்ரீ டாக்டர் ஸம்ரியின் சார்பில் ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ ஹமிடா ஒஸ்மான் வழியனுப்பி வைத்தார். டத்தோ மா ஹங் சவ், முகமது சஹிர், டத்தோ எஸ். வீரசிங்கம் உட்பட பத்திரிகையாளர்களும் அதில் இடம் பெற்றிருந்தனர்.

கோலாலம்பூர், சுபாங் விமான நிலையத்தில் இருந்து மேடான், லெக் தோபா, சிங்கப்பூர் என்று இன்னும் இதர இடங்களுக்குப் பயணச் சேவையினைத் தொடங்கியுள்ள ஃபயர் பிளை விமானம் ஈப்போ - சிங்கப்பூருக்கு திங்கள், புதன், வெள்ளி, ஞாயிறு என வாரத்தில் நான்கு நாட்களுக்குக் குறைந்த கட்டணத்தில் தனது சேவையினைத் தொடங்கியுள்ளது.

சிங்கப்பூரில் இருந்து ஈப்போவிற்கு 97 விழுக்காட்டுப் பயணிகள் தரைமார்க்கமாகவும் 3 விழுக்காட்டினர் விமானச் சேவையினை இதுவரை பயன்படுத்தி வந்துள்ளனர். புதிய விமானச் சேவையின் வழி அதிகமானோர் விமானச் சேவையினைப் பயன்படுத்துவதன் வழி இரு நாடுகளுக்கிடையிலான சுற்றுப்பயணத் துறையை மேம்படுத்த வழிவகுக்கும் என்று டத்தோ ஹமிடா தெரிவித்தார்



பயணிகள் வரவேற்கப்படுகின்றனர்.






தொடக்க விழாவில் நடனம் ஆடிய இந்திய பாரம்பரிய நடனக் குழுவினருடன் டத்தோ எஸ் வீரசிங்கம்.